1993 மார்ச் 16]

அரசுக் கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் வரும் ஆண்டுகளில் தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக்கு ஏற்ப புதிய கட்டடம் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமருகல் பகுதியில் 3 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்று திருமருகல் அரசு மேல்நிலைப் பள்ளி, மற்றொன்று ஏனங்குடி அரசு மேல் நிலைப் பள்ளி, மற்றொன்று திட்டச்சேரி அரசு மேல்நிலைப்பள்ளி. இந்த மூன்று மேல்நிலைப் பள்ளிகளிலும் சுமார் 2,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள அவர்களின் பெற்றோர்களின் பொருளாதார நிலையும் சிரமத்தில் இருப்பதால் இந்த மாணவர்கள் தங்களுடைய ஊர்களில் இருந்து வந்து படிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. அவர்களுடைய பொருளாதார நிலையும் கீழே உள்ளது. அதனால் அவர்கள் மேற்படிப்புக்குச் செல்ல இயலாத நிலையும் உள்ளது. ஆகவே இந்த மூன்று பகுதிகளையும் இணைத்து வரும் நிதியாண்டில் ஒரு ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆதிதிராவிட நல விடுதிக்கு கட்டிடம் கேட்டிருந்தார்கள். கட்டிடம் கட்டுவதற்கான இடம் கையகப்படுத்தப்பட்டு கட்டித் தரப்படும் என்பதை அறிவித்து இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

99--

கன்னியாகுமரி மாவட்டத்தைச்சார்ந்த வெள்ளாளர் இனத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

* *16893*-**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த வெள்ளாள சமுதாய மக்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது சேர்க்கப்படுவர் ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனவத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளாளர் சமுதாய மக்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 2,72,000 வெள்ளாளர் சமுதாயத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். அதில் 1,40,000 ஆண்களும், 1,32,000 பெண்களும் உள்ளார்கள். அதில் படித்தவர்கள் சுமார் 52,000 பேர் இருக்கிறார்கள். இங்கு 23,000 பேர் பள்ளிப்படிப்பை மேற்கொண்டிருக்கிறார்கள். அதில் 3,000 பேர் மட்டும் அரசு வேலைகளில் இருக்கிறார்கள். சுமார் 1 லட்சம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். குமரி மாவட்டம், முன்பு கேரள மாநிலத்தில் இருந்தபோது இந்த சமுதாயத்தினர் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு அனைத்து சலுகைகளையும் பெற்று வந்தார்கள். இந்த சமுதாயத்தினர் பொருளாதாரத்திலும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களை பின் தங்கியோர் பட்டியலில் சேர்த்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்பட்டோர் நலக்குழு, கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கிற இந்த சமூக மக்களை ஆய்வு செய்தபோது, கல்வி மற்றும் சமூக நிலையில் அவர்கள் பின்தங்கியவர்களாக இல்லை என்பதைத் தெரிவித்திருந்தது. ஆகவே, அதுகுறித்து பரிந்துரை செய்யவில்லை. இந்த நிலைமைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பதைக் கண்டு நமது சமூகநீதியின் காவலராகவும் ஏழை எளிய மக்களின், பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர், சிறுபான்மை இன மக்களின் காவல் தெய்வமாக விளங்குகிற நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மூன்றாவது பிற்பட்டோர் நலக்குழுவை அமைக்க ஒரு வழியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுப்ரீம்கோர்ட் அளித்த தீர்ப்பின்படி ஒரு நிரந்தர ஆணையம் அமைக்கவேண்டுமென்ற கருத்தினை ஏற்று நமது போற்றுதலுக்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நிரந்தர ஆணையத்தை ஏற்படுத்துவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

100 --

அருந்ததிய இனத்தவருக்கு ஊராட்சி மையங்களில் காலணி தயாரிக்கும் தொழிற்கூடம் அமைத்தல்.

* 10503-திரு எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அருந்ததிய இனத்தவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் பெரும் பகுதியாக அவர்கள் வாழும் ஊராட்சி மையங்கள்தோறும் காலணி தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?